பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 15 திங்கட்கிழமை 02.10.2023 அதிர்வு 63

நீதிபதி சரவணராஜாவின்

## பதவி விலகல் பற்றி சி.ஐ.டி. விசாரணை

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பான வழக்கை ஆராய்ந்து வந்த முல்லைத் தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா தமது பதவியிலிருந்து விலகி வெளிநாடு 05



"நீதித்துறையின் சுயாதீனம் மீது அரச வன்முறை"

# "சர்வதேச நீதியே எமது பரிந்துரை"

### கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டம்; ஐ.நாவுக்கும் மனு

- கிளிநொச்சி நிருபர்கள் -

இலங்கைத்தீவில் நீதித்துறை மீது அரச நிர்வாகத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வகை நெருக்கீடுகள் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு நீதியும் பாதுகாப்பும் கிடைக்கக் கோரியும், நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்கக் கோரியும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இன்று கிளிநொச்சி நகரில் கவன வீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது. 04



## யாழ்ப்பாணத்தில் 'காந்தி ஜெயந்தி'




- எஸ்.நிதர்ஷன் -

மகாத்மா காந்தியின் 154 ஆவது பிறந்த தின நிகழ்வு இன்று காலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் 05

## முல்லைத்தீவு சட்டத்தரணிகள் தொடர் பணிப்புறக்கணிப்பு!

- முல்லைத்தீவு நிருபர் -



முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவண ராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு 05

## வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகள் நாளை முல்லையில் போராட்டம்

- முல்லைத்தீவு நிருபர் -

முல்லைத்தீவு நீதிமன்றம் முன்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சட்டத்தரணிகள் இணைந்து நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மாபெரும் 05

## ஆயுதப் போராட்டத்தை ஏன் கைவிட்டோம் என வருந்துகின்றோம்

### ஜனாவின் மணிவிழாவில் செல்வம் இப்படித் தெரிவிப்பு

- என்.புவியரசன் -

"ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த நாங்கள் அதனை ஏன் கைவிட்டோம் என எண்ணி இன்று வருந்துகின்றோம்."

- இவ்வாறு ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ருமான செல்வம் அடைக்கலநாதன் தெரி வித்தார். 05



# உலகில் மிகக் குறைந்த வருமானம் பெற்ற நாடாக இலங்கை உள்ளது

## அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

கடந்த ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், உலகிலேயே மிகக் குறைந்த வருமானத்தைப் பெற்ற நாடு இலங்கையாகவே உள்ளது.

இந்த ஆபத்தான உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய.

நிர்வாகத்தை வலுப்படுத்துதல், வரி விலக்குகளில் சிறு குறைப்புகளைச் செயல்படுத்துதல் மற்றும் வரி ஏய்ப்பைத் தீவிரமாக எதிர்த்துப் போராடுதல் உள்ளிட்ட சர்வதேச நாணய நிதியத்தால் பரிந்துரைக்கப்பட்ட, பல்வேறு நடவடிக்கைகளின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அரசின் வருமானம் 50 வீதத்தால் அதிகரித்துள்ள போதிலும், அது போதுமானதாக இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அரசியல் தலையீடுகள் எதுவுமின்றித் திறந்த போட்டியின் மூலம் 138 உதவிச் சுங்க அத்தியட்சகர்களையும் 45 சுங்க பரிசோதகர்களையும் இணைத்துக் கொள்ளத்திட்டமிடப்பட்டுள்ளதாக ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார்.

# பயணச் சீட்டு இல்லாது பயணித்தால் இனிமேல் அபராதம் 3 ஆயிரம் ரூபா

இலங்கையில் அரச பேருந்துகளில் பயணச்சீட்டு இல்லாமல் பயணிப்பவர்களுக்கான அபராதத்தை மூவாயிரம் ரூபாவாக உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயணச்சீட்டைப் பெற்றுக் கொள்ளாமல் பயணிப்பவர்கள், சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டால் மூவாயிரம் ரூபா அபராதத்துடன், இரு மடங்கு கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பேருந்துகளில் பயணச்சீட்டு இல்லாமல் பயணிப்பதால் அரசுக்கு நாளாந்தம் சுமார் 70 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்படுகிறது என்றும் அதனை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அடுத்த வருடம் இந்த சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி. அல்விஸ் கூறியுள்ளார்.

இந்த நிலையில் தற்போது பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்பவர்களுக்கு 250 ரூபா அபராதமும், இரண்டு மடங்கு கட்டணமும் அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு!

(த.சுபேஸ்)

சாவகச்சேரி, நுணாவில் ஏ-9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் விடுதி உரிமையாளரான இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நுணாவில் பகுதியில் இருந்து சாவகச்சேரி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் சாவகச்சேரியில் இருந்து நுணாவில் நோக்கிச் பயணித்த பிக்கப் வாகனமும் ஒன்றோடு ஒன்று மோதியதில் விபத்து நேர்ந்துள்ளது.



சம்பவத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த நுணாவில் பகுதி விடுதி ஒன்றின் உரிமையாளரான 35 வயதான இளைஞரே உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வசதிகளற்ற பல மருத்துவமனைகள் அடுத்த வாரம் மூடப்படும் நிலையில்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தகவல்

நாட்டில் சிக்கலான சூழ்நிலையில் இயங்கி வரும் பல மருத்துவமனைகள், கிராமப்புற மருத்துவமனைகள் மற்றும் மத்திய மருந்தகங்கள் அடுத்த இரண்டு வாரங்களில் மூடப்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மீதமாக இருக்க வேண்டிய மருத்துவர்களின் எண்ணிக்கையை விட குறைவாக உள்ள வைத்தியசாலைகள், மருந்துகள் இல்லாத வைத்தியசாலைகள், ஆய்வக பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாத வைத்தியசாலைகளில் வைத்தியர்களை தங்க வைப்பதில் பயனில்லை என்று சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே சுட்டிக்காட்டியுள்ளார்.

மூடப்படும் அபாயத்தில் உள்ள சிறிய மருத்துவமனைகள் குறித்து அடுத்த இரு வாரங்களில் சிறப்பு ஆய்வு நடத்தப்படவுள்ளது. தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டு இது தொடர்பில் அறிவிக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



(படங்கள்:- எஸ்.நிதர்ஷன்)

# யாழ்ப்பாணத்தில் இன்று 'காந்தி ஜெயந்தி'

மகாத்மா காந்தியின் 154 ஆவது பிறந்தநாள் தின நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. இதன்போது காந்தீயம் ஏடு வெளியிட்டு வைக்கப்பட்டு அதன் பிரதிகள் அனைவருக்கும் வழங்கி வைக்கப்பட்டன.



















# “சர்வதேச நீதியே எமது பரிந்துரை”






(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் உறுப்பினர்கள், மாவட்ட வர்த்தக சங்கத்தினர், சட்டத்தரணிகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

போராட்டக்காரர்கள், “முல்லைத்தீவு நீதிபதி பதவி விலக அழுத்தம் கொடுத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்”, “நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தவர்கள் கைது செய்யப்பட வேண்டும்”, “நீதியின் கழுத்தில் தூக்குக் கயிறு நீர்த்துப்போனதா நியாயத்தின் உணர்வு?”, “நீதித்துறையின் சுயாதீனம் மீது அரச வன்முறை் சர்வதேச நீதியே எமது பரிந்துரை!”, “வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும்”, “அடம் பிடிக்காதே ஐ.நாவே! ஈழத் தமிழர்களுக்கு ஆறுதல் அளித்திடு ஐ.நாவே!!” போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பினர்.






போராட்டத்தின் இறுதியில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்ரெஸுக்கு அனுப்பி வைப்பதற்கு ஏதுவாக நாளை கொழும்பில் வைத்து, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரான்ஸிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் கையளிக்கப்படவுள்ள ‘இலங்கை நீதித்துறை மீதான அரச நெருக்கீடுகளுக்குப் பரிகாரம் காண்பதற்கான பரிந்துரைப்பு மனு’ வாசிக்கப்பட்டது.

அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“இலங்கைத்தீவில் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகின்ற இன முரண்பாடுகள் தொடர்பிலும், சிங்களத்தின் கட்டமைக்கப்பட்ட இன ரீதியான வஞ்சிப்புகள் தொடர்பிலும், அது இனப்படுகொலையாக வியாபகம் பெற்ற வரலாறு தொடர்பிலும் தங்கள் அறிக்கையாளர்கள் ஊடாக தாங்கள் அறிந்துள்ளீர்கள் என்பதை நாம் அறிவோம்.

ஒரு தேசிய இனத்தின் பாரம்பரிய வாழ்விடங்கள் மீதும், அதன் கூட்டுப் பண்பாடுகள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நீதி, நிர்வாகத்துறை ரீதியான பாகுபாடுகள் மற்றும் காலத்துக்குக் காலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற வன்பறிப்புகள் என்பவை, உலகத்தில் வாழ்கின்ற எண்ணிக்கையில் குறைந்த ஒரு தேசிய இனக்குழுமத்தை எவ்வாறு நிர்மூலமாக்கும் என்பதை உணர்ந்து கொள்வது அத்தனை சிரமமானதல்ல.

இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய இனம் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையும் ஓரவஞ்சகப் போக்கும் இன்று இலங்கைத்தீவில் உள்ள தேசிய இனங்கள் அனைத்தினதும் ஜனநாயக நீதித்துறை சார் உரிமைகளைப் பறித்துள்ளது என்பது நிதர்சனமாகும்.

அரசுக்குப் பலம் கிடைக்கின்ற போதெல்லாம் அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு நிர்வாகத்துறையின் கைப்பொம்மையாகச் செயற்படும் விதமாகவே நீதித்துறை உருவாக்கப்பட்டு வருகின்றது. நீதிச் சேவைகள் ஆணைக்குழுவை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கி அதனூடாக நீதிபதிகளின் நியமனங்கள், பதவி உயர்வுகள், நலனோம்பு நயக்கொடைகள், பயிற்சிகள் மற்றும் பாதுகாப்பு என்பவையெல்லாம் அரசியல் அதிகார விருப்பப்படியே மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்மூலம் அரசு விரும்பிய தீர்ப்புக்களைப் பெறவும், ஆணைகளை வழங்கவும், அரசியல் அதிகாரத்தைக் காபந்து செய்யவும் ஏற்ற வகையில் இலங்கையின் நீதித்துறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனால் சட்டத்தின் ஆட்சி பறிக்கப்பட்டு நிர்வாகத்துறையின் நோக்கங்களை அடையும் வகையில், விசேடமாக அரசினது போர்க்குற்றங்கள், இனப்படுகொலை விடயங்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயங்கள், மனிதப்புதைகுழி விவகாரங்கள், பௌத்தமயமாக்கல், நில மற்றும் பண்பாட்டு ஆக்கிரமிப்பு என்பவற்றை சட்டமுறைமைகளுக்கு முரணாகக் கையாள்வதற்கு நீதித்துறை நிர்ப்பந்திக்கப்பட்ட–தன் விளைவே நீதிபதி சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறிய நிகழ்வாகும்.

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை தனது ஆட்சியின் நோக்காகக் கொண்டு சர்வாதிகாரச் சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் ஜனநாயக முலாம் பூசிக்கொண்டு திடமான வெளியுறவு, பொருளாதாரக் கொள்கைகள் எவையுமின்றி, உறுதியான அரசியலமைப்பு ஏற்பாடுகளின்றி வெறும் இனத்துவேசச் சிந்தனைகளின்மேல் ஏறிநின்று இலங்கையின் நீதித்துறையினையும் இங்கு வாழ்கின்ற தமிழ்த் தேசிய இனத்தையும் கட்டமைக்கப்பட்ட வழிமுறைகளின் ஊடாக அரசு அழித்து ஒழித்து வரும் உச்ச தருணமாகிய இவ்வேளையில் தாங்களும் சர்வதேச சமூகமும் நேரடியாகத் தலையீடுசெய்து அமைதி, சமாதானம், நல்லிணக்கம், நீதித்துறையின் சுயாதீனம் என்பவற்றைப் பாதுகாக்கவும் சகோதரத்துவம் மிக்க இலங்கையைக் கட்டியெழுப்பவும் தங்கள் எல்லாவகை வல்லமைகளும் அணுகுமுறைகளும் சமரசங்களற்ற வகையில் இலங்கைத்தீவுக்குத் தேவையென தங்களை அழைத்து நிற்கின்றோம்.” – என்றுள்ளது.

# அமரர் தங்கராசா பூமணி ஞாபகார்த்த கிண்ணம்

# பாலமுனை றை ஸ்டார் வசம்

(றியாஸ் ஆதம்)

மட்டக்களப்பு கோவில்போரதீவு உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பாலமுனை றை ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தினை சுவீ கரித்துக்கொண்டது.

உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்திய 'அமரர் தங்கராசா பூமணி ஞாப கார்த்தக் கிண்ணம் - 2023' கிரிக் கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி நேற்றுமுன்தினம் (30) உதயதாரகை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் மட்டக்களப்பு அக்னி ஸ்டார், பாலமுனை றை ஸ்டார் கழக அணி கள் மோதின.

முதலில்துடுப்பெடுத்தாடியறைஸ்டார் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து



93 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 94 ஓட்டங்களை வெற்றி யிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய அக்னி ஸ்டார் அணி, 8 ஓவர்கள் நிறைவில் 6 விக்கட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது.

இறுதிப்போட்டியில் வெற்றிபெற்ற றை ஸ்டார் அணிக்கு சம்பியன் கிண்ண மும் 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

இரண்டாமித்தைப் பெற்ற அக்னி ஸ்டார் அணிக்கு கிண்ணமும் 25 ஆயி ரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பதவி விலகல் பற்றி...**

சென்றமை தொடர்பில் முழுமையான விசாரணைகளை

முன்னெடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

நீதிபதி ரி.சரவணராஜா தமது, பதவி விலகல் கடிதத்தை, நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்குக் கடந்த 23ஆம் திகதி அனுப்பியிருந்தார். இது தொடர்பான கடிதம் கடந்த 28ஆம் திகதி வெளியாகி யிருந்தது.

குருந்தூர்மலை விவகாரத்தில், முல் லைத்தீவு நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய கட்டளைகளை மதிக்காது நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுள்ளன என்று முல்லைத்தீவு நீதவான் ரீ.சரவணராஜா குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்து, தமக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தாம் வகித்து வந்த நீதித்துறை சார்ந்த சகல பொறுப்புகளில் இருந்தும் விலகத் தீர்மானித்ததாக அவர் அந்தக் கடிதத்தின் ஊடாக அறிவித்திருந்தார்.

அத்துடன், தொல்பொருள் திணைக் களப் பணிப்பாளர் நாயகம் முல்லைத் தீவு நீதிமன்றக் கட்டளைகளை மதித் துச் செயற்படவில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், நாடாளுமன்ற உறுப் பினர் சரத் வீரசேகர நாடாளுமன்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் முல்லைத் தீவு நீதிபதியின் தீர்ப்பு குறித்து விமர்சித் திருந்தார்.

இவ்வாறான சூழலில், முல்லைத்தீவு நீதிபதி தமது பதவியில் இருந்து விலகி யிருந்ததுடன், அவர் வெளிநாட்டுக் குச் சென்றிருந்தார் என்று தகவல்கள் வெளியாகின.

இந்தநிலையில், அவர் வெளிநாடு சென்றமை தொடர்பில் பூரண விசாரணை களை ஆரம்பிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தைப் பணித்துள்ளார்.

இதேவேளை, நீதிபதி ரி.சரவணராஜா பதவி விலகியமை தொடர்பில், முறையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பிரதம நீதியரசரிடம் கோரியுள்ளது.

---

**யாழ்ப்பாணத்தில்...**

ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக் கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப் பாணம் மாவட்ட செயலர் அ.சிவபால சுந்தரன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு திருமுருகன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன், வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பா ளர் த.சத்தியமூர்த்தி, யாழ்.மாநகர ஆணை யாளர் இ.த.ஜெயசீலன் மற்றும் சமய சமூகப் பிரதிநிதிகள், இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது காந்தீயம் ஏடு வெளி யிட்டு வைக்கப்பட்டு அதன் பிரதிகள் அனைவருக்கும் வழங்கி வைக்கப்பட்டன.

---

**ஆயுதப்போராட்டத்தை...**

ரெலோவின்பெதுச்செயலாளரும்மட்டக் களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினருமான ஜனாவின் (கோவிந்தன் கருணாகரம்) 60ஆவது பிறந்தநாளை யொட்டி நடைபெற்ற 'ஜனாவின் வாக்கு மூலம்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் இன்று எங்கு பார்த் தாலும் புத்த பிக்குகளின் நாட்டாமைத் தனத்தையும், முப்படைகள் தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் அடாவடித் தனத்தையுமே காணக்கூடியதாக உள் ளது.

இதனையெல்லாம் பார்க்கும்போது எமக்கு ஏன் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டோம் என வருத்தமாக உள்ளது. மீண்டும் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித் தால் என்ன என்ற எண்ணமும் தோன்று கின்றது." - என்றார்.

---

**முல்லைத்தீவு...**

எதிராக முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் இன்று தொடக்கம் காலவரையறை யின்றி தொடர் நீதிமன்றப் பணிப்புறக் கணிப்பைச் செய்வதாக முடிவெடுத் துள்ளனர்.

முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தைச் சார்ந்த சட்டத்தரணிகள் அனைவரும் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாகாது தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணிப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**வடக்கு, கிழக்கு...**

போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சர வணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீ திக்கு எதிராகவே இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளி நொச்சி, வவுனியா, மன்னார், திருகோண மலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள அனைத்து சட்டத் தரணிகள் சங்கங்களின் சட்டத்தரணி களும் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அலி சப்ரியின் அதிகப்பிரசங்கித்தனம்

இலங்கை ஒரு தனி நாடு. அதற்கு இறைமை, சுயாதிபத்தியம் எல்லாம் உண்டு என்று நம் தலைவர்கள் பீற்றிக்கொண்டாலும், வல்லாதிக்க நாடுகள், உபகண்ட தேசங்கள், பெரும் பொருளாதார இமயங்கள் போன்ற வற்றுக்கு மத்தியில் இலங்கை இந்தனூண்டு குட்டித் தீவே. மாமலைகளுக்கு மத்தியில் இருக்கும் மடுவே. உலக ஒழுங்கு முறைகளில் இதுவே யதார்த்தப் புறநிலைமையாகும்.

இது புரியாமல் அதிகம் பிரபலாபிக்கின்றார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.

அவர் வெளியுறவு விடயங்களைப் பொறுப்புணர்வின்றி 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற பாணியில் கையாளுகின்றார் என இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்டுருந்தோம்.

ஒரு கிராம சபைத் தேர்தலைக் கூட எதிர்கொண்ட முன் அனுபவம் இல்லாத இராணுவ அதிகாரியான கோட்டாபயவை நேரடியாக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வைத்து ஜனாதிபதியாக்கியமைக்கு இந்த நாடு பட்ட துன்பம் போதும். அதேபோல தேர்தலையோ, ஜனநாயகச் செயற்பாடுகளையோ நேரடியாகச் சந்தித்தே இராத அலி சப்ரியைப் பின் கதவால் தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாக்கி, இப்போது அதன் வாயிலாக வெளிவிவகார அமைச்சரக்கியமையால் அவர் மூலமும் பட்டுத் தெளிய வேண்டி நேரிடும் என்று கோடிகாட்டி இருந்தோம்.

எமது அந்தக் கருத்து - கணிப்பு - முற்றிலும் சரி என்பதை அவரும் வெளிப்படுத்தி உணர்த்தி வருகின்றார் என்றே தோன்றுகிறது.

ஒரு நாட்டின் சர்வதேச ராஜதந்திர ஊடாட்டம் என்பது தனியே அந்த நாட்டின் நலன் பற்றியது மட்டுமல்ல, பல சமயங்களில், அது நாடு கடந்தும் ஒன்றிணைவுகள், கூட்டுச் செயற்பாடுகள், அணி திரள்வுகள் சம்பந்தப்பட்டவைதான். தனித்தனி நாடுகள் இணைந்து ஐரோப்பிய ஒன்றியம் என்றோ, நேட்டோ அமைப்பு என்றோ திரள்வதன் உட்கிடை இதுதான். தனி நாடுகளையும், கூட்டுக்களையும் எதிர்கொண்டு கையாள்வதுதான் சர்வதேச ராஜதந்திர ஊடாட்டம்.

"உங்கள் சொந்தப் புவிசார் அரசியல் கவலைகள் தொடர்பான விடயங்கள் குறித்தே எங்களுடன் நேரடி உரையாடல்களை மேற்கொள்ளுங்கள். எந்த ஒரு மூன்றாம் தரப்பின் விடயம் தொடர்பாகவும் அல்ல" - என்று அமெரிக்க மற்றும் ஜப்பான் உயர்தலைமைகளுக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேரடியாக - முகத்தில் அடித்தால் போல - கூறிவிட்டார் என்று கொழும்பில் செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க வெளியுறவுத்துறை துணைச் செயலாளர் விக்டோரியா நூலண்ட் அம்மையார் உள்ளிட்ட பல நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்தபோது இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பட்டவர்த்தனமாக இவ்விடயத்தை கூறிவிட்டார் என்று இலங்கைத் தரப்புகள் பீற்றிக் கொள்கின்றன.

இலங்கை உட்பட்ட இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பில் சீனாவின் அச்சுறுத்தலினால் எழுந்துள்ள நிலைமைகளைக் கையாள்வதற்காக அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய நான்கு நாடுகளும் கூட்டமைத்து ஐக்கியப்பட்டு செயற்பட்டு வருகையிலேயே இந்தியா தவிர்ந்த மற்ற நாடுகளுக்கு இவ்வாறு 'தத்துவ உபதேசம்' செய்திருக்கின்றார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.

இந்த அதிகப்பிரசங்கித்தனம் இலங்கையின் நலனுக்கு உகந்ததல்ல என்பதை மட்டும் இப்போதைக்கு கூறி வைக்க விரும்புகிறோம்.

## இலங்கைக்கு வரிச் சுமையை தந்துள்ளது நாணய நிதியம்!

### விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்கு வரிச் சுமை மட்டுமே கிடைத்துள்ளது என்று தேசிய மக்கள் சத்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்–

சர்வதேச கடன்களை மறுசீரமைக்கும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோரப்பட்ட போதிலும் எதிர்பார்க்கப்பட்ட உதவி கிடைக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து வரிச்சுமை மட்டுமே கிடைத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கடன் கிடைக்கப் பெறுமா என்பது சந்தேகமே.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் அடிப்படையில் நீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணம் உள்ளிட்ட பல்வேறு விலை அதிகரிப்புக்களை அரசு மேற்கொண்டுள்ளது.– என்றார்.

## 'சொக்லேட்' வாங்கிச் சாப்பிட்ட மாணவனுக்கு ஏற்பட்ட விபரீதம்

யாழ்ப்பாணத்தில் மாணவி ஒருவரிடமிருந்து 'சொக்லேட்'டை வாங்கிய மாணவன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் வைத்து மாணவி ஒருவர் கொடுத்த 'சொக்லேட்'டை வாங்கிய சக மாணவன் ஒருவன், குறித்த மாணவியின் அண்ணனால் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

13 வயதான மாணவி சில தினங்களுக்கு முன்னர் தனது வகுப்பு மாணவர்களுக்குச் 'சொக்லேட்' வழங்கியுள்ளார்.

இந்த நிலையில் தாக்குதலுக்கு உள்ளான 14 வயதுடைய மாணவனுக்கும் 'சொக்லேட்' வழங்கி யுள்ளார்.

இந்த நிலையில் எதற்காகச் 'சொக்லேட்'டை வாங்கினாய்? என்று வினவி மாணவியின் 17வயதுடைய அண்ணன் அந்த மாணவன் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

மாணவியின் அண்ணனின் தவறான புரிதலே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் பொலிஸார் முறைப்பாட்டை ஏற்க மறுத்திருந்தனர் எனவும், அது குறித்து தொலைபேசி ஊடாக பொலிஸ் திணைக்களத்துக்கு புகார் செய்ய முற்பட்டபோது முறைப்பாட்டை அவர்கள் பதிவு செய்தனர் என்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## அரச ஊழியருக்குச் சாதகமான முன்மொழிவு 2024 'பட்ஜெட்'டில்

2024 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு முன்னுரிமையளிக்கும் வகையிலான பல முன்மொழிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி அரச ஊழியர்களின் ஓய்வு வயது 60 ஆண்டுகள் என்பதுடன், சுகாதாரத்துறையில் உள்ளவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் பல தொழில்களில் உள்ளவர்களுக்கு அவர்களின் சேவையை 2 அல்லது 3 ஆண்டுகள் நீடிக்கும் விருப்பத்தை வழங்குவதற்கான முன்மொழிவுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

இதேவேளை வருமான வரி கணிசமாக உயர்த்தப்பட்ட தொழில் வல்லுநர்களுக்கு நிவாரணம் வழங்குவதே வரவு செலவுத் திட்டத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# திலீபனின் நினைவு தினத்தில் முன்னாள் போராளிகளுக்கு உதவி




இலங்கையில் நிலவும் பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு புலம்பெயர் அமைப்புகள் தம்மால் இயன்ற பல்வேறு உதவித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

அந்தவகையில், தியாக திலீபன் நினைவு தினத்தை முன்னிட்டு, லண்டனிலுள்ள நமது ஈழநாடு வாழ்வாதார திட்டத்தின் ஏற்பாட்டில், யுத்தத்தில் அங்கவீனமுற்ற சில முன்னாள் போராளிகளுக்கும் மாவீரர் குடும்ப உறுப்பினர்களுக்கும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கம் ஹெவகே விதுர விஸ்வநாத், இகுருஹேந ஜனக ஹேமந்த தலவத்தகே மற்றும் செல்வி. இகுரஹேனகே அமோத்ய இல்மி தலவத்தகே ஆகியோரின் நான்கு லட்சத்து ஐயாயிரம் ரூபா நிதிப் பங்களப்பில் இந்த உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

அந்தவகையில் ஆனந்தபுரம் கிழக்கைச் சேர்ந்த ரவீந்திரராசா பேபிக்கு கோழி வளர்ப்புக்காக 50 ஆயிரம் ரூபா நிதியுதவியும், ஊற்றுப்புலம், நாவலர் பண்ணையைச் சேர்ந்த சந்திரகுமார் இந்திராணிக்குத் தோட்டம் செய்வதற்காக 50 ஆயிரம் ரூபா நிதியுதவியும், பாரதிபுரத்தைச் சேர்ந்த கிருஸ்ணசாமி கிருஸ்ணகுமாருக்கு வயலுக்கு நீர் இறைக்கும் இயந்திரக் கொள்வனவுக்கு 65 ஆயிரம் ரூபா நிதி உதவியும், கட்டைப்பிராயைச் சேர்ந்த சசிகுமார் மினிஷாவுக்கு சைக்கிள் கொள்வனவுக்கு 42ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்டு தற்போது போராளி குடும்பங்களாகவும், மாவீரர் குடும்பங்களாகவும் வாழ்ந்துவரும் தெரிவு செய்யப்பட்ட 20 பேருக்கு உலருணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

இந்த உதவித் திட்டங்கள் கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அவர்களின் அலுவலகத்தில் சங்க நிர்வாக உறுப்பினர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டன.

# ஆவணமின்றி ஜப்பான் செல்ல முயன்ற நபரால் கட்டுநாயக்காவில் பரபரப்பு நிலை

## சந்தேக நபர் கைதாகி விளக்க மறியலில்

கட்டுநாயக்க விமான நிலையத்துக்குள் இரகசியமாக பிரவேசிக்க முயன்ற நபரால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குள் இரகசியமாகப் பிரவேசித்து ஜப்பானுக்கு பயணத்தை ஆரம்பிக்கவிருந்த நிலையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வத்தளை, ஹெந்தலையைச் சேர்ந்த ஏ.பி.சுதாகர் இந்திரஜித் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட நபர் தொடர்பில் விசேட விசாரணைகளை ஆரம்பிக்குமாறு நீர்கொழும்பு பதில் நீதிவான் இந்திக சில்வா நேற்று (01) உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சந்தேகநபர் ஜப்பானில் சில காலம் பணியாற்றிய பின்னர் திருமணம் செய்து கொள்வதற்காக இலங்கைக்கு வந்தவர் எனவும், பின்னர் ஜப்பான் செல்வதாக மனைவியிடம் கூறிவிட்டு நேற்று முன்தினம் (30) வீட்டை விட்டு வெளியேறியவர் எனவும் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடம் ஜப்பான் செல்வதற்கான ஆவணம் எதுவும் இருக்கவில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.





# சர்வதேச ரீதியாக ஏற்கப்பட்ட சிறுவர் உரிமைகள் இலங்கையில் நடைமுறையில் இருக்கின்றனவா?

## மனித அபிவிருத்தி தாபனத்தின் பணிப்பாளர் சிவப்பிரகாசம் கேள்வி

(வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறுவர் உரிமை ஒப்பந்தம் இலங்கையால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் எவ்வாறு காணப்படுகின்றது என்ற மாபெரும் கேள்வி எம்முன் எழுந்து நிற்கின்றது .

இவ்வாறு மனித அபிவிருத்தி தாபனத்தின் ஸ்தாபக பணிப்பாளர் கலாநிதி பி.பி. சிவப்பிரகாசம் தெரவித்துள்ளார்.

கொட்டகலையில் நேற்று (01) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வில் தலைமையுரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

கொட்டகலை கேம்பிரிஜ் கல்லூரியில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

இதற்கு ஆலோசனை மற்றும் அனுசரனைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பிரதேச செயலகம், சுகாதார பணிமனை மற்றும் சிவில் கூட்டமைப்பு என்பன வழங்கியிருந்தன.

நிகழ்வில் தொடர்ந்து அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளவை வருமாறு–

இலங்கையைப் பொறுத்தவரையில் சிறுவர் தினமானது ஒக்ரோபர் முதலாம் திகதி அனுஸ்டிக்கப்படுகின்றது. இந்த தினமானது, வெறுமனே கொண்டாடுவதற்கான தினம் மட்டுமல்ல. சிறுவர்களுக்கு எதிரான பாகுபாடு, வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம், சித்திரவதை என்பவற்றிலிருந்து அவர்களை விடுதலை செய்வதற்கான அல்லது அவற்றுக்கு எதிராகப் போராடுவதற்கான களத்தையும் உறுதிப்படுத்தும் ஒரு நாளாகவே நான் கருதுகின்றேன்.

உலகில் உள்ள அனைத்து சமூக அமைப்புகளிலும் சிறுவர்கள் முக்கிய வகிப்பாகத்தைக் கொண்டுள்ளனர். 18 வயதுக்குக் குறைந்தவர்களைச் சிறுவர்களாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது.

1990களில் நடைமுறைக்கு வந்த சர்வதேச சிறுவர் உரிமை சாசனம் சிறுவர்களுக்கான உரிமை குறித்து பேசுகின்றது.

சிறுவர்கள் ஒரு விசேட குழுவினர் என்ற அடிப்படையில், அவர்களின் உரிமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையால் இந்தச் சிறுவர் உரிமை சாசனம் அங்கத்துவ நாடுகளிடையே நடைமுறைப்படுத்தலை ஊக்குவிக்கின்றது.



இலங்கை 1991 ஆம் ஆண்டு இந்தச் சாசனத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

மலையகத்தைப் பொறுத்தவரையில் 200 வருடங்கள் வரலாற்றை குறித்து பேசிக்கொண்டிருக்கின்றோம்.

ஆனால், இந்த வரலாற்றுக் கால கட்டத்தில் சிறுவர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த மலையக சமூகத்துக்கு எதிரான மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றே வருகின்றது.

சிறுவர்களின் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, விளையாட்டு, சுதந்திரம் போன்ற பல்வேறு உரிமைகள் பாதிக்கப்பட்டே வருகின்றன. ஏனைய சிறுவர்களோடு ஒப்பிடும்போது, இன்று பல்வேறு அபிவிருத்தி மாற்றங்கள் இடம் பெற்றாலும்கூட, ஒட்டுமொத்தத்தில் ஒரு அரையடிமை நிலைமையில்தான் மலையக சிறுவர்கள் வாழ்ந்துவருகின்றார்கள்.

சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மனித அபிவிருத்தி ஸ்தாபனம் போன்ற சிவில் அமைப்புகளும் மற்றும் அரச நிறுவனங்களும் பாதுகாப்பு அமைப்புகளும் நடைமுறைப் படுத்துகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் மலையகத்திலேயே மிக அதிகமான சிறுவர் தொழிலாளர்கள் காணப்படுகின்றனர் என்று ஊடக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இது அடிமைத்தனத்தின் ஒரு அங்கமாகவே காணலாம். மனித அபிவிருத்தி தாபனம் சிறுவர் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

மலையக ஆண் மற்றும் பெண் சிறுவர்கள் நகர்ப்புற வீடுகள், கடைகள் மற்றும் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். இத்தகைய சிறுவர்கள் துஷ்பிரயோகம், சுரண்டல் மற்றும் சித்திரவதைக்கு ஆளாகி, அண்மைய ஆண்டுகளில் மர்மமான முறையில் இறப்பது இலங்கையின் சிறுவர் உரிமைகளின் வரலாற்றை துரதிர்ஷ்ட வசமான விடயமாகும்.

இதனை மனித அபிவிருத்தி தாபனமானது கடுமையாக எதிர்ப்பது மட்டுமன்றி சட்ட ஆலோசனை மற்றும் உதவிகளை வழங்கிவருகின்றது. கிராமப்புற மற்றும் தோட்டப்புற சிறுவர்களின் கல்வி மற்றும் நலன் என்பது அரசின் தவிர்க்க முடியாத பொறுப்பாகும். அவர்களின் அடிப்படை உரிமைகளைச் சமரசம் செய்யவோ, பண்டமாற்று செய்யவோ முடியாது.

மலையக சமூகத்தில் சிறுவர்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுவது பாரிய பிரச்சினையாகவே இன்றும் காணப்படுகின்றது. குறிப்பாக மலையக சமூகத்தின் பெண் பிள்ளைகள் வீட்டு வன்முறை, பாலியல் கொடுமைகள், பால்நிலை சமத்துவமின்மை போன்ற பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள்.

மலையகப் பெருந்தோட்ட தொழிற்துறையில் ஈடுபடும் பெற்றோர்கள் வேலை செய்யும் நேரங்களில் தங்களது பிள்ளைகளை வீடுகளில் தனியாகவோ அல்லது அயலவர்களிடம் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களில், பாடசாலை போன்ற இடங்களில் விட்டு செல்கின்றனர். அத்துடன் மிக குறைவான நேரங்களையே மலையக பெற்றோர்கள் பிள்ளைகளுக்காக ஒதுக்குகின்றமையால் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தெரிந்து கொள்வற்கும் சந்தர்ப்பம் மிக குறைவாகவே காணப்படுகின்றது.

இந்தப் பிரச்சினைகள் வறுமையின் காரணமாக மட்டும் ஏற்பட்டதென்று குறிப்பிடமுடியாது. இதற்கு அரசியல், சமூக, பொருளாதார, பெருந்தோட்ட கட்டமைப்பு மற்றும் மதுபானம், மது போதை, புலம்பெயர் தொழில், நவீன தொலைதொடர்பு போன்ற பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றது.

எவ்வாறேனினும் அரசியல் ரீதியாக நிதானமாகவும் நீண்ட காலத்துக்குத் தேவையான உபாய மார்க்கங்கள் அடையாளம் காணப்படவேண்டியுள்ளன. இதற்குக் கொள்கைத் திட்டம் உருவாக்கம் மற்றும் தீர்க்க தரிசன தலைமைத்துவம் தேவை என்பது வழியுறுத்தப்படுகின்றது. –என்றார்.

# புதிய பொலிஸ் மா அதிபரை நியமிக்க ரணில் நடவடிக்கை

புதிய பொலிஸ் மா அதிபரை இந்த மாதத்தில் நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்து வருகின்றார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவுக்கு மேலும் சேவை நீடிப்பு வழங்கப்பட மாட்டாது என்று பொலிஸ் ஆணைக்குழு ஜனாதிபதி செயலகத்துக்குக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளது. இதனை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஆணைக்குழு, சந்தன விக்கிரமரத்னவின் பதவிக் காலத்தை ஜூலை மாதம் 9 ஆம் திகதி முதல் மூன்று மாத காலத்துக்கு நீடித்திருந்தது.

இதன்படி இந்த இரண்டாவது பதவிக் காலம் ஒக்ரோபர் 9 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இந்த நிலையில், புதிய பொலிஸ் மா அதிபரை ரணில் விக்ரமசிங்க நியமிக்கவுள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

# மாணவர்களுக்குப் போதை விறட்பனை செய்தவர் கைது!

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் களுத்துறை வடக்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை வடக்கு பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் செய்த பல முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் கைது செய்த சந்தர்ப்பத்தில் சந்தேகபரிடம் இருந்து 6 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

அவரிடம் நடத்திய விசாரணையில் அவரது வீட்டில் 1080 போதை மாத்திரைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இதன்படி சந்தேக நபர் களுத்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளார். களுத்துறை வடக்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# மீனவர் சங்கத்துக்கு குழாய்க் கிணறு

(சப்னா றிபாஸ்)

பொத்துவில் களப்புக்கட்டு மீனவர் சங்கத்துக்கு குழாய்க் கிணறு அமைத்துக்கொடுக்கப்பட்டது.

றிஸ்லி முஸ்தபா எடியுகேசன் எயிட் சமூகசேவை அமைப்பிடம் பொத்துவில் களப்புக்கட்டு மீனவர் சங்கத்தினர் விடுத்த கோரிக்கைக்கமைய இந்த குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

அமைப்பின் ஸ்தாபகர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கந்து கொண்டு குழாய்க் கிணற்றை திறந்து வைத்து மீனவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

# அட்டாளைச்சேனையில் யானைகள் அட்டகாசம்

(எம். எப். நவாஸ்)

அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனை 9 ஆம் கிராமப் பிரிவில் அண்மையில் (30) நடுநிசியில் உட்புகுந்த யானைகள் அங்கு பலரது வீட்டு மதில் சுவர்களை உடைத்துள்ளன. தோட்டப் பயிர்களை துவம்சம் செய்துள்ளன . இதன் காரணமாக இந்தப் பிரதேச மக்கள் பீதி அடைந்துள்ளனர் .

அவர்களின் பெறுமதியான சொத்துகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகர் பிரிவில் சம்புநகர், முல்லைத்தீவு, திராய்க்கேணி, பாலமுனை கிறா நகர் , ஒலுவில் அஷ்ரப் கிராமங்களிலுள்ள மக்கள் தொடர்ச்சியாக யானைகளின் அட்டகாசத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

யானைகளின் வருகையை கட்டுப்படுத்த சம்மந்தப்பட்ட அதி காரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# விபுலானந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகள் தேசிய சாதனை!

**( வி.ரி. சகாதேவராஜா)**

காரைதீவு விபுலாநந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகள் தேசிய தமிழ் சிங்கள நடன போட்டியில் சாதனை படைத்துள்ளனர்.

இந்தத் தமிழ் சிங்கள நடன தேசிய மட்ட போட்டியானது நேற்றுக் கண்டி பொல்கொல மகாவலி தேசிய கல்வியற் கல்லூரியில் நடைபெற்றது.

புத்தசாசன மற்றும் கலை,கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் பிரதீபா தேசிய மட்டப் போட்டிக்கு கல்முனை கலாசார மத்திய நிலையத்தின் ஊடாக காரை தீவு விபுலானந்தா நாட்டிய நிருத்தி யாலய மாணவிகள் பங்கேற்றனர்.

அங்கு அவர்கள் 2 ஆம் இடத்தில் வெற்றிபெற்று சாதனை படைத் துள்ளனர்.

பயிற்றுவித்த நடன ஆசிரியை திருமதி சர்மினி சுதாகரன் மற்றும் ஸ்தாபகர் ஜெயகோபன் தக்ஷாளினி ஆகியோருக்கு பாராட்டுக்கள் தெரிவிக் கப்பட்டுள்ளன. வவுனியா நிருத்தியால யம் முதலிடத்தை பெற்றுள்ளது.

# சிறுவர்களை வளர்த்தெடுப்பதில் பெற்றோரின் பங்கு முக்கியமானது

## கெஸ்டோ அமைப்பின் தலைவர் உரை

**(சப்னா றிபாஸ்)**

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் இவர்களை வளர்த்தெடுப் பதில் பெற்றோர்களின் பங்களிப்பு முக்கியமானது என்று கெஸ்டோ அமைப்பின் தலைவரும், அதிபருமான ஜெ.எம்.அன்வர் நௌஸாட் தெரிவித்தார்

ஆயிஷா முன்பள்ளி பாடசாலை யின் சிறுவர் தின நிகழ்வுகள் அக்க ரைப்பற்று நீர் பூங்காவில் நடை பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு–

ஒரு சமூதாயத்தின் சொத்துக்களாக எமது சிறுவர்களை நாம் பார்க்கின் றோம். அவர்களை நற்பண்புகளோடு வளர வைக்கும் மிகப் பெரிய பொறுப்பு நம்மெல்லோருக்கும் இருக்கிறது. மற்றவர்களை மதித்து மரியாதை



செய்யும் பண்பை நாம் சிறுவர்களின் மனதில் அதிகமாக ஊட்டவேண்டும்.

ஒவ்வொரு பெற்றோரும் தங்களது பிள்ளைகள் ஒரு வைத்தியராக, பொறி யியலாளராக, சமுதாயத்தில் ஒரு மதிப்புமிக்க ஒருவராக வர வேண்டும் என்ற கனவோடு இருக்கிறார்கள். அந்தக் கனவுகளுக்கு நாம் வழிகாட் டியாக இருக்க வேண்டும்.

போட்டி நிகழ்வுகளின் போது வெற்றி யைப் பெறும் சிறுவர்களை ஊக்கப் படுத்தும் நாம் தோல்வியைக் கண்டு துவண்டு விடக் கூடாது என்ற உண்மை யையும், உத்வேகத்தையும் வழங்க வேண்டும். முயற்சிகள் மூலமாக எதனையும் சாதிக்கலாம். கனவுகளை வெல்வதற்கு விடாமுயற்சி முக்கியமா னது என்பதை அவர்கள் மனதில் விதைக்க வேண்டும்.

ஒரு குடும்பத்தின் வாழ்க்கையை மாற்றுகின்ற அளப் பெரிய சக்தி சிறு வர்களுக்கே உண்டு. சமூகச் சூழலில் அதி உன்னதமான வளமாக இருப்பவர் களும் சிறுவர்களே.

அற்புதமான அழகிய பண்புகளோடு வளர்கின்ற போது, அவர்கள் மகத்து வம், விழுமியம், நம்பிக்கை, நற்சிந் தனை ஆகியவற்றைக் கொண்டு அவர்களைப் பின்தொடர்கின்ற சந்த திக்கும் உத்வேகம் கொடுக்கின்ற வர்களாக உருவெடுப்பார்கள்.– என்றார்.

# சமுர்த்திப் பயனாளிக்கு வீடமைப்புக்கு உதவி

**(எம். எப். நவாஸ் )**

சமுர்த்தி வீட்டு லொத்தர் சீட்டிழுப்பின் மூலம் வெற்றி பெற்றவருக்கு இரண்டு லட்சம் ரூபாவுக்கான காசோலையை அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிர் அண்மை யில் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ எம். ஹமித் , சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ எஸ் எம். உனைஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



## சாவகச்சேரி உள்ளூர் அபிவிருத்தி

# மக்கள் வாக்கெடுப்பின் மூலம் திட்டங்களுக்கு முன்னுரிமை

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் 2023 - 2024 காலப் பகுதியில் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கான இறுதிக் கட்டக் கலந்துரையாடல் சனிக்கிழமை (30) சாவகச்சேரி நகர சபையின் பொன்விழா மண்டபத்தில் நகரசபைச் செயலாளர் தலைமையில் பொது மக்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.



வாக்கெடுப்புக்கான இறுதி முடிவுகள் எதிர்வரும் ஆறாம் திகதி வெள்ளிக்கிழமை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மக்களின் வாக்குகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு உரிய திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது நுணாவில் கிழக்கில் சிறுவர் பூங்கா அமைத்தல், உள்ளக விளையாட்டு மைதானம் அமைத்தல் மலக்கழிவு மீள் சுழற்சி பொறிமுறை அமைத்தல், சாவகச்சேரி பொது விளையாட்டு மைதான புனரமைப்பு, நகர வடிகாலமைப்பை ஏற்படுத்தல், கலிபவுசர் சேவையை வழங்கல், தீயணைப்புப் பிரிவு அமைத்தல், முன்பள்ளிச் சிறார்களுக்கு சத்துமா வழங்கல், பொழுதுபோக்கு மையம் நிறுவுதல், உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான விற்பனை நிலையம் அமைத்தல், பாரம்பரிய உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான நிலையம் அமைத்தல் உள்ளிட்ட 23 திட்டங்கள் கடந்த காலத்தில் மக்களால் முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டங்களாக அடையாளப்படுத்தப்பட்டன.

அவற்றில் எந்த வேலைத்திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்வது என்று மக்களுடைய தெரிவுக்காக வாக்கெடுப்புக்கு விடப்பட்டிருந்தது.

உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் நிதி உதவியில் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ள மேற்படி அபிவிருத்தித் திட்டத்தில் வீதி அபிவிருத்தியை தவிர்க்குமாறு உலக வங்கி அறிவுறுத்தியது. இந்த நிலையில் வீதி அபிவிருத்தி தவிர்ந்த ஏனைய பொருளாதாரத்தை வளர்க்கக் கூடிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் ஊடாகச் சாவகச்சேரி நகர சபைக்கு இரண்டு பிரிவுகளாக 71 மில்லியன் நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மலையகத்தில் தேசிக்காய் ஒரு கிலோ 2100 ரூபா !

(மஸ்கெலியா நிருபர்)

மலையகத்தின் பல பகுதிகளில் தேசிக்காய் ஒன்றின் விலை சுமார் 50 ரூபாவை எட்டியுள்ளது என்று அந்த பகுதி வர்த்தகர்கள் குறிப்பிடுகின்றனர்.

நாட்டில் தற்போது நிலவும் மழையான காலநிலை காரணமாகவும் விளைச்சல் மிக மிக குறைந்த அளவில் காணப்படுவதால் தேசிக்காய் அறுவடை குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது .

அதன் காரணமாக விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் ஒரு கிலோ தேசிக்காய் 2 ஆயிரத்து 100 ரூபாவை எட்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.







## முதியோர் கௌரவிப்பு !

(பழுவூரான்)

மட்டக்களப்பு கோட்டைமுனை சிரேஷ்ட பிரஜைகள் முதியோர் சங்கத்தால் தெரிவு செய்யப்பட்ட முதியோருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு விஷ்வகர்ம கலாசார மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை (01) இடம்பெற்றது.

சங்கத் தலைவர் சி . சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வன்னியசிங்கம் வாசுதேவன் பிரதம அதிதியாகவும், மண்முனை வடக்கு பிரதேச செயலக சமூகசேவை கலாசார உத்தியோகத்தர் பஞ்சாட்சரம் இராஜ்மோகன் மற்றும் மண்முனைவடக்கு உரிமை மேம்பாடு உத்தியோஸ்தார் திருமதி நிலக்சி நிருசன், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி பிரியதர்சினி திருலோகச்சந்திரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.



# மருவிவரும் நாட்டார் பாடல்கள்...!

வாழ்கை நிகழ்ச்சிகளையும் அவற்றால் ஏற்படும் உணர்ச்சிகளையும் கல்வியறிவில்லாத பாமரமக்கள் தமக்கு இயற்கையாக அமைந்த திறமையாலும், பயிற்சியாலும், மரபு வழிப்பட்ட இசையமைப்புக்களுடன் பாடுவர்.

அத்தகைய பழமை வாய்ந்த இசை மரபுப் பாடல்களே நாட்டுப்புறப் பாடல்கள் எனப்படும். இநத் நாட்டுப்புறப் பாடல்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடப்படுபவை ஆகும். நாட்டுப்புறப் பாடல்கள் தனிமனித அல்லது சமூகத்தின் அனுபவங்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துபவனவாகவும் குறிப்பிட்ட தேசத்துப்பண்பாட்டு வழக்காறுகளை உள்வாங்கியனவாகவும் காணப்படுகின்றன.

கடுமையான இசை, நுணுக்கங்களற்ற எளிதான ஓசையமைப்பினைப் பின்பற்றிப் பாடப்படுதல் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். பாடல்களின் ஓசை, எளிமை என்பன பாடுவோரையும் கேட்போரையும் ஒருங்கே வசப்படுத்துவதோடு பாடற்பொருளமைப்பையும் எளிதில் விளங்கிக் கொள்ளத் துணை புரிகின்றன. நாட்டுப் புறப் பாடல்கள், நிகழ்ச்சிகளின் நம்பிக்கைகளின் எதிர்விளைவாகவும் மனிதத்தேவையின் நிமித்தம் ஏற்படும் உணர்ச்சிகளின் வெளிப்பாடாகவும் அமைவதால் ஆற்றலும் உயிர்த் துடிப்பும் கொண்டு விளங்குகின்றன.

தமிழ்மரபில் நாட்டுப்புறப் பாடல்களை நாட்டார் பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள், நாடோடிப் பாடல், வாய்மொழிப் பாடல்கள், பாமரர் பாடல், பரம பரைப்பாடல், கிராமியப் பாடல், கல்லாதர் பாடல், மக்கள் பாடல், ஏட்டில் எழுதாக்கவி, மலையருவி, காட்டுப் பூக்கள், வனமலர், காற்றில் மிதந்த கவிதை, இயற்கைப்பாட்டு என்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. நாட்டுப்புறப்பாடல்கள் மனித வாழ்வியலுடன் நெருக்கமானவை ஆகும். மனிதனின் பிறப்பில் தொடங்கி இறப்புவரை நாட்டார் பாடல்களின் செல்வாக்கைக் காணக் கூடியதாகவுள்ளது. மக்களின் பாரம்பரியம், பண்பாடு, கலைகள், பழக்கவழக்கங்கள், மனித இன்ப துன்பங்களை அவை புலப்படுத்தி மக்கள் வரலாற்றை அறிய உதவுகின்றன.

நாட்டுப்புற பாடல்களின் வகைகளாக தாலாட்டுப் பாடல், கும்மிப்பாடல், ஊஞ்சல் பாடல், விளையாட்டுப்பாடல், தொழிற்பாடல், காதல் பாடல், கப்பற் பாடல், ஒப்பாரி போன்றவை அமைந்துள்ளன. நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் கூறுகள் ஒவ்வொன்றும் எமது பண்பாட்டின் அடையாளங்கள் ஆகும். வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் நாட்டுப் புறப்பாடல்கள் இடம்பெறுகின்றன. நாட்டார் பாடல்கள் மக்கள் வாழ்வியலை பிரதிபலிப்பதாகவும் வாழ்வியலோடு கலந்தவையாகவும் விளங்குகின்றன. வாழ்வின் எல்லா சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற வகையில் மக்களால் உருவாக்கப் பட்டவை ஆகும்.

மனித வாழ்வில் ஒவ்வொரு கால கட்டப் பகுதியிலும் நாட்டுப் புறப் பாடல்கள் இணைந்தவையாக காணப்படுகின்றன. ஒரு மனிதன் கருவில் இருக்கும் போதும், பிறக்கும் போதும் தாலாட்டுப்பாடல்களில் ஆரம்பமாகி அவன் இறக்கும்போது பாடப்படும் ஒப்பாரி பாடல்கள் வரையும் நாட்டுப் புறப் பாடல்கள் செல்வாக்கு பெறுகின்றன. அது போலவே கடினமான வேலைகளைச் செய்யும்போது வேலையில் களைப்புத் தன்மை தெரியாமல் இருப்பதற்காக நாட்டுப் புறப் பாடல்களின் ஒரு வகைப் பாடான தொழிற்பாடல்கள் பாடப்படுகின்றன.

நாட்டார் பாடல்கள் கவலைகளை மறக்கச் செய்வதற்கும் காதல் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தவும் வலிகளைக் கூறவும் சிறந்த ஒரு கருவியாக விளங்குகின்றன.

நாட்டார் பாடல்களின் கவர்ச்சியான இசையில் பாடப்படுகின்றது. மற்றும் பயிற்சி பெறாதவர்களும் கூட பாடக் கூடிய எளிமையானதாகவும் இருக்கின்றது.

நாட்டார் பாடல்கள் மக்களின் கலைகள் பண்பாடு பாரம்பரிய என்பவற்றைப் புலப்படுத்தி மக்கள் வரலாற்றை அறிய உதவுவதோடு மக்களின் பழக்கவழக்கங்களையும் புலப்படுத்தி நிற்கின்றது.

மக்கள் அனுபவித்த இன்ப துன்பங்களை இப்பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஓய்வு நேரங்களில் மக்கள் அனுபவித்த இன்ப வாழ்க்கையை வேலை செய்யும் போது அவற்றின் களைப்பு தெரியாதிருக்கவும் இந்த பாடல்கள் உதவுகின்றன.

ஆடிப்பாடி விளையாடிய ஆட்டங்களையும் இல்லற வாழ்க்கையையும், அரசியல் வாழ்க்கையையும் மற்றும் மக்களின் தொன்மையான நாகரீகத்தையும் அது வளர்ந்த வரலாற்று விதத்தையும் உரைப்பனமாக நாட்டார் பாடல்கள் காணப்படுகின்றன.

ஏட்டுக்கல்வி பெரும்பாலும் இல்லாத நாட்டு மக்களிடையே, எழுதாக்கவிகளாக தொன்றுதொட்டு வழங்கிவரும் பாடல்கள் எல்லா மொழிகளிலும் உள்ளன. பாடல்கள் மட்டுமன்றிக் கதைகள், பழமொழிகளும் உள்ளன. இவை எல்லாவற்றையும் ஒரு சேரக் குறிப்பதற்கு ஆங்கிலத்தில் கழடமடழசந எனும் பெயர் வழங்குகின்றோம். பொதுவாக நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்புறங்களில் வாழும் எழுத்தறிவில்லாத, பெயரறியாத கவிஞர்களால் பாடப்படுபவை ஆகும். எழுத்தறிவு இல்லாத பாமர மக்களால் பாடப் பெறுபவையாயினும் இவை இசை கலந்த இனிய பாடல்களாகவும் கேட்பார்கள் இவை செவிக்கும் இதயத்துக்கும் இன்பமளிக்க வல்லன. நாகரிகச் சூழலில் வாழும் நாட்டுப்புற மக்கள் மெல்ல மெல்ல நாகரிகத் தாக்கத்துக்கு இலக்காகி வருவதால் அவர்களின் வாய்மொழி இலக்கியம் தொன்மை வடிவத்தைப் பெரும்பாலும் இழந்து விடுகிறது.

இப்பாடல்கள் எவரும் எழுதி வைக்காமையால் பல பாடல்களுக்கு நிலையான ஒரு வடிவம் இல்லை. காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்றவாறு இவை விரிந்தும் சுருங்கிங்கியும் திரிந்தும் நின்று வழங்குகின்றன.

பழைய பாடல்கள் முற்றாக மறைந்து போக அவற்றின் சாயலிலே புதிய பாடல்கள் அவ்வப்போது தோன்றுவதும் உண்டு. இயற்கையில் உண்டான ஒலிகளைக் கொண்டு மனிதன் குரலொலிகளைக் கொண்டு பாடல்கள் உருவாகின. மொழி மனிதனுக்கு துணையாக வந்தபோது முதல் பாடல் தோன்றியிருக்கும்.

பாடல்கள் சிறு பாடல்களாகவும் நீண்ட பாடல்களாகவும் உள்ளன.

**(13ஆம் பக்கம் பார்க்க)**

# மருவிவரும் நாட்டார் பாடல்கள்...!

(112ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் ஒய்ந்திருக்கும் நேரங்களில் மாத்திரமன்றி பல வகையான தொழில் களை செய்யும் போதும் பாட்டுப்பாடி மகிழ்ந்தனர். முக்கியமாக பலர் கூடித் தொழில் புரியும்போது ‘ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது’ என்ற உண்மையினை உணர்த்தியுள்ளனர். இதனால் பல்வேறு தொழில்கள் பற்றிய பாடல்கள் பல்கிப்பெருகின.

அடுத்து ஆணும்பெண்ணுமாக சேர்ந்து வேலை செய்யும் போது தொழி லாளிகள் உற்சாகம் கொள்வது இயல் பானது ஆகும். இத்தகைய சூழ்நிலை யில் காதல் சுவையுள்ள பாடல்களும் ஆண், பெண் ஏசல் போன்ற பாடல்க ளும் தோன்றுகின்றன. பெண்களுக்கே சிறப்பாக உரிய பல பாடல்கள் உள்ளன. தாலட்டு, ஒப்பாரி, கும்மி , ஊஞ்சல், கோலட்டம் போன்றவை இவ்வகையி னுள் அடங்கும். வேடிக்கை விளையாட்டி லும் பல பாடல்கள் பிறக்கின்றன. இவை தவிர பண்டிகைகள், கொண்டாட்டங்கள், விழாக்கள், களியாட்டங்கள், கடவுள் வழிபாடுகள், சடங்குகள் போன்ற சந்தர்ப்பங்களில் மக்கள் பாடிய போதும் நாட்டுப்பாடல்கள் தோன் றுகின்றன.

நாட்டுப்புற மக்களின் உள்ளத்தை கவர்ந்த வீரர்களின் வாழ்க்கை கதைப்பாடல்களாக உருவெடுத்தன. தேவர்களின் செயல்களையும் பழைய வீரர்களின் கதைகளையும் நாடகமாக்கி ஆடும்போது நாடகப் பாடல்கள் தோற் றம் பெற்றன. இவ்வாறாகவே நாட்டார் இலக்கியம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடத்தக்க, பல்வேறு வகையான, பல்வேறு அளவுடைய, பல்சுவை அள வுடையதாக விளங்குவதைக் காண லாம்.

தமிழ் மொழியில் ஏட்டு மொழி இலக்கியம் போலவே எழுதாக் கவிதை இலக்கியங்களும் நல்ல வளமுடைய வையாக விளங்குகின்றன. தமிழர்க ளின் வாழ்வியலுடன் பிண்ணிப் பிணைந்த நாட்டார் பாடல்கள் மனித பிறப்பிலிருந்து ஆரம்பமாகி இறப்பு வரையும் நீடித்து நிலைக்கின்றன.

அதாவது குழந்தை பிறக்கும்போது மருத்துவிச்சி வாழ்த்து பாடுகின்றாள் அதன் பின்பு தாய் தாலாட்டு பாடுகின் றாள், அமுதூட்டும் போதும் பிள்ளைக்கு விளையாட்டுக் காட்டும் போதும், கதை சொல்லும் போதும் பாடுகின்றார் கள் . பிள்ளை வளர்ந்து நண்பர்களுடன் விளையாடும் போது விளையாட்டு பாடல்களையும் வேளாண்மை பாடல் களையும் பாடி மகிழ்கன்றனர். கட்டி ளமைப்பருவத்தில் காதல் பாடல் களையும், ஒவ்வொரு தொழில் புரியும் போதும் பல்வகைப்பட்ட தொழில் பாடல்களையும் இறை வழிபாட்டின் போதும் சமூகக் கொண்டாட்டங்களின் போதும், பின்பு மனிதன் இறக்கும் போது ஒப்பாரி பாடல்களும் பாடுகின் றனர். இவ்வாறாகவே இயற்கையோடு இயைந்த வாழ்கை நடத்தும் வாழ் வியலை வெளிப்படுத்துபவையாக நாட்டார் பாடல்கள் அமைகின்றன.

ஒரு காலகட்டங்களில் வரவேற்கப் பட்டு வளர்த்து எடுக்கப்பட்ட பாடல்கள் தற்போது அழிவை நோக்கி நகர்ந்து கொண்டு இருக்கின்றன. இதற்குப் பல காரணங்களைக் கூறிக்கொள்ள முடியும்.

இலங்கையில் ஏற்பட்ட போர்ச்சூழல், அதன் பின்னர் ஏற்பட்ட நவீன தொழி நுட்ப வளர்ச்சி, நவீன உலகம், ஊடகப் பண் பாட்டின் ஆளுகை, தொலைக் காட்சியின் வருகை, சினிமாவின் தாக் கம், கலாச்சார மோகம், சமூக வலைத் தளங்களில் மூழ்கிப்போதல், சினிமாப் பாடல்களின் வளர்ச்சி, நாட்டார் பாடல்கள் குறித்த போதிய அறிவின்மை, ஆர்வமின்மை போன்ற காரணங்களை கூறிக்கொள்ள முடியும். இக்காரணங் களால் தற்காலத்தில் நாட்டார் பாடல்க ளுடைய செல்வாக்கு, புழக்கம் குறை வடைந்து செல்கின்றது. நாட்டார் பாடல்கள் அழிந்து விடவில்லை. அவற்றை மீட்டெடுக்க வழி யில்லாமல் அவை தேங்கிக் கிடக்கின்றன.

நாட்டுப்பற பாடல்களை மீட்டெடுப்ப தற்கு எல்லா வகையைச் சார்ந்த நாட்டுப்புற பாடல்களையும் நூல்களா கத் தொகுத்து வெளியிடுதல், வீடியோ, ஓடியோ ஒலிப்பதிவுகளாக ஆவணப் படுத்துதல், பண்டிகைக் காலங்களின் போது தொலைக்காட்சி அலைவரிசை களில் நாட்டார் பாடல்கள் தொடர்பான நிகழ்ச்சிகளை ஒலிபரப்புதல், இலக்கிய விமர்சண ஆய்வுகளை முன்னெடுத்தல், சினிமாப் பாடல்களில் நாட்டுப்புற பாடல்களின் செல்வாக்கை உட்புகுத்தல் போன்ற நடவடிக்கைகளின் வாயிலாக நாட்டுப்புற பாடல்களின் நிலைத்திருப் பைத் தாக்க வைத்துக் கொள்ள முடியும்.

உலகில் வளர்ந்து வரும் நவீன மயமாக்கத்தின் காரணமாக பல தொன்மை மிக்க இலக்கியங்கள் அழி வடைந்த நிலையில் நாட்டார் பாடல் களாவை இன்று வரை சில பிரதேசங் களில் காணப்படுகின்றமை குறிப் பிடத் தக்க ஒரு விடயமாக காணப்படுகிறது.

இவ்வாறு காணப்படுகின்ற நாடார் பாடல்கள் தற்காலத்தில் சில இசைக் கலைஞர்களால் புத்துருவாக்கம் பெற்று வருகின்றமையும் சிறப்புக்குரிய ஒரு விடயமாகும்.

நாட்டார் பாடல்கள் ஒவ்வொரு சமூ கத்தினதும் பண்பாட்டையும் வாழ் வியலையும் பிரதிபலிப்பவையாகக் காணப்படுகின்றன. கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட நாட்டார் பாடல்களை மீட்டெடுத்துத் தமிழர் பாரம் பரியத்தை நிலைத்திருக்கச் செய்வது நமது ஒவ்வொருவரது கடமை ஆகும்.

**ஜீவரத்தினம் கஜீபா,**
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.





# சிட்னியில் இன்று வெளியான மாத்தளை சோமுவின் நூல் !

பழந்தமிழர்க்கு இருந்த தனித்த அறிவுத் திறத்தை வெளிப்படுத்தும் மாத்தளை சோமுவின் 28 ஆவது நூலான ‘வியக்க வைக்கும் பழந்தமிழர் சிந்தனைகள்’ என்னும் நூல் சிட்னியில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இந்த நூல் வெளியீட்டு விழா இன்று (02) திங்கள் கிழமை சிட்னியில் உள்ள துங்காபி புனித அந்தோனியார் தேவாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இலக்கிய ஆர்வலர்கள் இதில் கலந்து கொண்டனர்.

தலைமை உரையை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் ஸ்தாபக பீடாதிபதி, டாக்டர் திருநாவுக்கரசு கமலநாதன் ஆற்றினார்.

நியூசிலாந்தில் இருந்து வருகை தந்த நியூசிலாந்து கல்வித் திணைக்கள ஆங்கில போதனாசிரியர் முனைவர் இலக்குவனார் சொக்கலிங்கம் சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தினார்.



# மாகாண மெய்வன்மைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர் கௌரவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய கல்முனை அல்- பஹ்ரியா மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கிழக்கு மாகாண பாடசாலை மெய்வன்மைப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டி தேசிய மட்ட பாடசாலை மெய்வன்மைப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை முதல்வர் எம்.எஸ்.எம். பைசால் தலைமையில் பாடசாலையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து பாட சாலை முன்றலில் வைத்து வெற்றியீட்டிய மாணவர்களுக்கு மாலைகள் அணிவித்து, பதக்கங்கள் அணிவித்து பாடசாலைக்கு அழைத்து வந்து பாராட்டி கௌரவித்தனர்.

# மல்வானையில் சிறுவர் தின நிகழ்வு

(அஷ்ரப் ஏ சமத் )

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மல்வானை பிரதேசத்தில் உள்ள சகல பாலர் பாடசாலைகளையும் இணைத்து பிரி ஸ்குல் எடியுகேசன் நெட்வோர்க் திட்டத்தின் கீழ் 250 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் மல்வானை அல் முபாரக் தேசிய பாடசாலையின் மைதானத்தில் ஒன்று கூடினர்.

இந்த நிகழ்வில் சிறுவர்கள் ஆடல், பாடல், களியாட்டம் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

பியகம இலங்கை வங்கியால் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் சித்திரம் வரைதலுக்கு ஊக்குவிக்கப்பட்டனர்.

அதில் தேர்வு பெற்ற மாணவர்களுக்குச் சேமிப்பு உண்டியல், பேனை, பென்சில் போன்ற பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன.









# சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்கள் தேசிய மட்டத்தில் சாதனை

(நூருல் ஹுதா உமர்)

கலாசார அலுவல்கள் அமைச்சால் வருடம் தோறும் நடத்தப்பட்டுவரும் பிரதீபா - 2023 தேசிய மட்டப் போட்டிகளில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் பயிற்சி பெற்றுவரும் மாணவர் குழுவினர்கள் கிழக்கு மாகாணத்தில் முதலாம் இரண்டாம் இடங்களை பெற்றுள்ளனர்.

அத்துடன் கனிஷ்ட நடன நிகழ்ச்சியான ரபான், கோலாட்டம் போன்ற போட்டிகளிலும், சிரேஷ்ட நிகழ்ச்சியான கோலாட்டத்திலும் சாதனை புரிந்துள்ளனர்.

தேசிய போட்டிகள் பொல்கொல்ல மகாவளி கல்விக் கல்லூரியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

சித்திரம் வரைதல் தேசிய மட்டத்தில் எம்.எல்.எப். ஜியா மூன்றாம் இடத்தையும் ஜெ.றின்சான் ஆறுதல் பரிசையும் பெற்றுள்ளனர்.



# மடு வலய வெள்ளிவிழாவும் கௌரவிப்பும்

(மன்னார் நிருபர்)

மடு வலயக் கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்த வெள்ளிவிழா நிகழ்வும் சாதனையாளர்கள் கௌரவிப்பும் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

மடு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி ஏ.கே.வொலன்ரைன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம். பற்றிக் டிறஞ்சன், சிறப்பு விருந்தினராக தி.ஜோண் குயின்ரஸ் மற்றும் கௌரவ விருந்தினர்களாக மடு வலய முன்னாள் பணிப்பாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதன் போது மடு கல்வி வலயத்தில் 2022 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள், க.பொ.த சாதாரண தர பரீட்சையில் 5 ஏ சித்திக்கு மேல் பெற்ற மாணவர்கள், மற்றும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.





# அட்டாளைச்சேனையில் மீலாத் விழா






(சியாத்.எம்.இஸ்மாயில் )

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரியின் உத்தம நபியின் உதய தின மீலாத் விழா நிகழ்வு - 2023 "நபிகளாரை நேசிப்போம்" எனும் தொனிப்பொருளில் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் கூடத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் மௌலவி ஏ.எல். எம்.அஷ்றப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண முதலமைச்சின் ஒய்வு பெற்ற செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ், அட்டாளைச்சேனை ஜம்மியதுல் உலமா சபை தலைவர் மௌலவி. யூ.எல். நியாஸ், ஓய்வு பெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர் மௌலவி. ஏ.எல்.எம். ஹாசீம் மற்றும் மார்க்க உலமாக்கள், புத்திஜிவிகள், பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கௌரவிப்பு...

(எம். எப். நவாஸ்)

அண்மையில் சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் நடைபெற்ற அஹதியா சான்றிதழ் வழங்கும் விழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் கௌரவ செந்தில் தொண்டமான் முன்னிலையில், சிறந்த சேவைக்காக சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து அல்ஹாஜ் எஸ்.எல்.முஹம்மத் ஹனீபா பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.



# இலங்கை தமிழர்களை ஏமாற்றுகிறார் சீமான்: காணொளியை வெளியிட்டார் வீரலட்சுமி





நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களை ஏமாற்றி பணம் பறிக்கிறார் என இளைஞர் ஒருவர் பேசும் குரல்பதிவை தமிழர் முன் னேற்றப் படையின் தலைவர் வீரலட்சுமி வெளியிட்டுள்ளார்.

நடிகை விஜயலட்சுமி, சீமான் விடயத்தில் முறைப்பாடு அளித்த விவகாரத்தில், தமிழர் முன்னேற்றப் படையின் தலைவர் வீரலட்சுமி குரல் கொடுத்திருந்தார்.

இந்த நிலையில் விஜயலட்சுமியை ஆதரித்ததால் வீரலட்சுமிக்கும், நாம் தமிழர் கட்சிக்கும் இடையேயான மோதல் வலுப்பெற்று இதுவரையிலும் தொடர்கிறது.

சீமானுக்கு எதிராக புதிய காணொளி ஒன்றை வீரலட்சுமி வெளியிட்டு இலங்கைத் தமிழர் விடயத்தில் புதிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

அதில், இலங்கைத் தமிழர்களுக்காக எண்ணற்ற தமிழர்கள் பாடுபட்டனர். இந்த நிலையில், இலங்கை தமிழர்களை சீமான் ஏமாற்றி பணம் பறித்துள்ளார் என்று குற்றம்சாட்டியுள்ளார்.

மேலும் அந்த காணொளியில் இலங்கைத் தமிழில் பேசும் இளைஞர் ஒருவர், ஆர்.கே. நகர் தேர்தல் தொடங்கி பல தேர்தல் செலவுக்காக சீமானுக்கு பணம் கொடுத்துள்ளேன் என பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இந்த காணொளி தற்போது சமூக ஊடகங்களில் பரவி வருகிறது. இந்த நிலையில், மௌனித்திருந்த வீரலட்சுமி – சீமான் மோதல் மீண்டும் சூடுபிடிக்க ஆரம்பமாகியுள்ளது.

# காந்தியின் நினைவிடத்தில் பிரதமர் மோடி மரியாதை



மகாத்மா காந்தியின் 155 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் பிரதமர் நரேந்திர மோடி மரியாதை செலுத்தியுள்ளார்.

இதனையடுத்து அவர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்ட பதிவில், காந்தி ஜெயந்தியை முன்னிட்டு மகாத்மா காந்திக்கு தலைவணங்குகிறேன்.

காலத்தால் அழியாத அவரது போதனைகள், நம் பாதையை ஒளிரச் செய்கின்றன. ஒட்டுமொத்த மனிதகுலத்திடமும் ஒற்றுமை மற்றும் இரக்க உணர்வை மேம்படுத்த ஊக்குவிக்கும் மகாத்மா காந்தியின் தாக்கம் உலகளாவியது. அவரது கனவுகளை நனவாக்க நாம் தொடர்ந்து பாடுபடுவோம். தான் கனவு கண்ட மாற்றத்தின் காரணியாக ஒவ்வொரு இளைஞரும் இருக்கவும், எங்கும் ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் வளர்க்கவும் மகாத்மாவின் சிந்தனைகள் உதவட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்தியாவின் இரண்டாவது பிரதமரான லால் பகதூர் சாஸ்திரியின் பிறந்தநாளை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது சமூக வலைத்தள பக்கத்தில், லால் பகதூர் சாஸ்திரியின் பிறந்தநாளில் அவரை நினைவு கூர்கிறேன். அவரது எளிமையும், தேசத்திற்கான அர்ப்பணிப்பும், ‘ஜெய் ஜவான், ஜெய் கிசான்’ என்ற புகழ்பெற்ற முழக்கமும் இன்றும் எதிரொலிப்பதுடன், தலைமுறைகளுக்கும் உத்வேகம் அளிக்கிறது. இந்தியாவின் முன்னேற்றத்திற்கான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் சவாலான காலங்களில் அவரது தலைமைத்துவம் முதலியவை முன்மாதிரியாக உள்ளன. வலுவான இந்தியாவுக்கான அவரது தொலைநோக்குப் பார்வையை நனவாக்க நாம் எப்போதும் பாடுபடுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# 870 பேர் மீது வழக்கு பதிவு!



காவிரியில் தமிழகத்துக்கு உரிய நீரை வழங்க மறுக்கும் கர்நாடக அரசை கண்டித்து தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் ஆளுநர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சைதாப்பேட்டையில் தொடங்கிய பேரணிக்கு அக்கட்சி தலைவர் வேல்முருகன் தலைமை வகித்தார்.

போராட்டத்தில் பங்கேற்றவர்கள், கர்நாடக அரசையும், மத்திய அரசையும் கண்டித்து கோஷங்களை எழுப்பினர். மேலும், ஆளுநர் மாளிகை நோக்கி பேரணியாக சென்று முற்றுகையிட முயன்ற போராட்டக்காரர்கள் அனைவரையும் கிண்டி பொலிஸார் கைது செய்து அருகில் உள்ள மண்டபத்தில் தங்கவைத்தனர். மாலையில் அனைவரையும் விடுவித்தனர்.

இந்த நிலையில், ஆளுநர் மாளிகையை நோக்கி பேரணி மற்றும் முற்றுகைபோராட்டம் நடத்திய தமிழக வாழ்வுரிமை கட்சியைச் சேர்ந்த 870 பேர் மீது கிண்டி பொலிஸார் 3 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிந்துள்ளனர்.

# உக்ரைனில் களமிறங்கும் பிரித்தானிய இராணுவம்!

உக்ரைனில் முதன்முறையாக பிரித்தானிய படையினர் களமிறக்கப்படவுள்ளது என பிரித்தானிய பாதுகாப்புச் செயலாளர் கிராண்ட் ஷாப்ஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கடந்த வாரம் உக்ரைன் சென்றிருந்த கிராண்ட் ஷாப்ஸ் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியை சந்தித்து பேசியுள்ளார்.

இராணுவத் தலைவர்களுடன் புதிய திட்டங்களைப் பற்றி விவாதித்த பின்னரே இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உக்ரைனுக்கு இராணுவ பயிற்சி அளிக்கும் ஒரு குழுவினை மிக விரைவில் அனுப்பி வைக்க முடிவு செய்துள்ளோம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், பிரித்தானிய பாதுகாப்பு தளவாட நிறுவனங்கள் உக்ரைனில் உற்பத்தியை முன்னெடுக்க வேண்டும் எனவும் விருப்பம் தெரிவித்துள்ளார்.



தனிப்பட்ட முறையில் உக்ரைனுக்கு இராணுவ பயிற்சி அளிக்கும் முடிவை தாம் வரவேற்றாலும், உற்பத்தியை உக்ரைனில் துவங்குவது சிறப்பாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதுமட்டுமன்றி விளாடிமிர் புடினின் படைகளிடமிருந்து கருங்கடலில் வணிகக் கப்பல்களைப் பாதுகாப்பதில் பிரித்தானிய கடற்படையின் போர்க்கப்பல்களை பயன்படுத்துவதன் சாத்தியம் குறித்து ஆலோசிக்கப்பட்டது எனவும் அவர் தெரி

# மேலும் ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேரை இராணுவத்தில் இணைக்க ரஷ்யா திட்டம்!

மேலதிகமாக ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேரை இராணுவத்தில் இணைக்க ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டின் திட்டமிட்டுள்ளார் என ரஷ்ய அரசாங்க இணைய தளத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

புதிதாக சேர்பவர்களுக்கான வயதெல்லை 27 இல் இருந்து 30 ஆக உயர்த்தப்பட்டுள்ளார் என குறிப்பிடப் பட்டுள்ளது.



அதேவேளை, உக்ரைனுடனான யுத்தம் ஆரம்பமாகி 20 மாதங்களை எட்டியுள்ளது. இந்த நிலையில், ரஷ்ய ஆயுத படையினர் உக்ரைனுடன் நீண்ட யுத்தத்தை மேற்கொள்ள தயாராகவுள்ளோம் என முன்னர் விளாடிமீர் புட்டின் தெரிவித்திருந்தார்.

ரஷ்யாவினால் சட்ட விரோதமாக உக்ரைனில் இணைக்கப்பட்ட பகுதிகள் உட்பட, ரஷ்ய கூட்டமைப்பின் அனைத்து பகுதிகளிலும் ஒக்டோபர் மாதம் முதல் இராணுவத்திற்கு கட்டாய ஆட்சேர்ப்பு ஆரம்பமாகும் என பாதுகாப்பு அமைச் சகம் தெரிவித்துள்ளது.

# தேவாலயத்தின் மேற்கூரை உடைந்து வீழ்ந்தது!



மெக்சிகோவில் உள்ள தேவாலயம் ஒன்றின் மேற்கூரை உடைந்து வீழ்ந்ததில் பலர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

மெக்சிகோவின் கடலோர மாநிலமான தமௌலிபாஸில் உள்ள செண்டா குரூஸ் தேவாலயத்தின் கூரையே இவ்வாறு உடைந்து வீழ்ந்துள்ளது.

மதிய வேளையில் இடம்பெற்ற ஞானஸ்நானத்தின் போது அந்த தேவாலயத்தின் கூரை உடைந்து விழுந் துள்ளது என கூறப்படுகிறது.

இந்த அனர்த்தத்தில் சிக்குண் டவர்களில் பல சிறார்களும் உள்ளடங் குகின்றனர்.

அத்துடன். அங்கு தொடந்து மீட்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின் றன.

எனினும் இந்த பகுதியில் அவசர தேவைகள் தாமதமாக இடம்பெற்று வருகின்றன என மெக்சிக்கோ தகவல்கள் தெரிவிக்கின்றன.